# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 36/2016
## PW12

| | | |
|---|---|---|
| Name | : | மரு. நாகேந்திரகுமார் |
| Father's/Husband's Name | : | அர்சுனன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.01.2025.

A1 to 5 and 7 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ உயர்நிலை துறையில் இணை பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.01.2015 அன்று நான் அரசு வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசியராக பணியில் இருந்தபோது தண்டராம்பட்டு காவல் ஆய்வாளரிடம் இருந்து பிற்பகல் 02.15 மணிக்கு காவலர் 106 திரு. முருகன் என்பவர் மூலம் பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி அந்நிலைய குற்ற எண். 3/2015 வழக்கில் இறந்துபோன திரு. இ. பரசுராமன் என்பவரின் பிரேதத்தைஅடையாளம் காண்பித்தார்.அவரின் அங்க அடையளாளங்களை சரிபார்த்து அவரின் பிரேதத்தை அதே நாளில் பிற்பகல் 02.30 மணியளவில் பிரேத கூராய்வு செய்தேன். கூராய்வின்போது மரண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. அவரது கைவிரல் நகங்கள் நீலம் பூத்து காணப்பட்டது.

அவரது உடலில் கீழ்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டது.

1. செம்பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள்

a. 1.5x0.8 செ.மீ அளவில் இடது புஜத்திலும்

b. 1.2x0.5 செ.மீ அளவில் வலது மணிக்கட்டிலும்

c. 5.5x3.5 செ.மீ அளவில் தலையின் இடது பின்புறத்திலும் காணப்பட்டன.

2. 6.5x3.5x2.8 செ.மீ அளவிலான கருஞ்சிவப்பு நிற பரவிய கன்றிய காயம் இடது தோள்பட்டையில்

3. கிடைமட்டமாக சாய்ந்த நீண்ட தையல் இட்ட கிழிந்த காயம் 5.5 செ.மீ நீளத்துடன் தலையின் இடது வெளிப்பகுதியில் காணப்பட்டது. அதை தொடர்ந்து கூராய்வு செய்ததில் தலைத்தோலின் அடியில் கருஞ்சிவப்பு நிற பரவிய கன்றிய காயம் தலை யின் இடது முன் பகுதி , இடது காதுக்கு மேல் உள்ள பகுதியில் மற்றும் தலையின் பின்பகுதி ஆகியவற்றில் காணப்பட்டது.. அதன் அடியில் இருந்த கபால எலும்பின் இடது பின்பகுதியில் 11.5 செ.மீ நீளமுள்ள விரிசல் முறிவு காணப்பட்டது. கபாலத்தை பிளந்து பார்த்தபோது 2.3 செ.மீ தடிமனுள்ள கருஞ்சிவப்பு நிற சப்டியூரல் ரத்தக்கட்டு இடது பெருமூளை , இரு பெருமூளைகளின் முன் மற்றும் பின் பகுதி ஆகியவற்றின் மேல் காணப்பட்டது. மூளையின் மேற்பரப்பு முழுவதும் மெல்லிய பரவிய Subarachnoid ரத்தக்கசிவு காணப்பட்டது. மூளை வீங்கியும், வெளிறியும் காணப்பட்டது. விலா எலும்புகள் இயல்பாக இருந்தன. இருதயம் இயல்பான அளவிலும், அதன் மேற்பரப்பில் பல புள்ளி போ்ன்ற ரத்தக்கசிவுகளுடன் காணப்பட்டது. அதன் அனைத்து அறைகளிலும் நீர்த்த மற்றும் உறைந்த ரத்தம் காணப்பட்டது. அதன் வால்வுகள் மற்றும் ரத்த நாளங்கள் இயல்பாக இருந்தன. நுரையீரல்கள் இயல்பான அளவில் இருந்தன. அதன் மேற்பரப்பில் பல புள்ளி போன்ற ரத்தக்கசிவுகளுடன் காணப்பட்டது. அவற்றை பிளந்து பார்த்தபோது ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் காலியாகவும், அவற்றின் சளிப்படலம் ரத்தம் தோய்ந்தும் காணப்பட்டது. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. இரைப்பையில் சுமார் 100 மி.லி கரும்பழுப்பு நிற திரவம் ரத்தத்துடன் கலந்துகாணப்பட்டது. அதன் சளிப்படலம் இயல்பாக இருந்தது. கல்லீரல் , மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான அளவிலும், ரத்தம் தோய்ந்தும் காணப்பட்டன. குடல்களில் பழுப்பு நிற திரவம் காணப்பட்டது. சிறுநீர்பை காலியாக இருந்தது. இடுப்பெலு ம்பு மற்றும்

முதுகெலும்புகள் இயல்பாக இருந்தன. அவரது உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து ரசாயன பரிசோதனைக்காக தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்குறிய பிரேத பரிசோதனை யின் தரவுகள் அடிப்படையில் இறந்த நபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றிதழ் **அ.சா.ஆ. 7.** மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அறிவாளால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பு உண்டா என்று கேட்டால் அதன் மழுங்கிய பகுதியால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன் இருந்த வழக்கு வரலாறின் அடிப்படையில்தான் பிரேத பரிசோதனை செய்தேனா என்றால் வேண்டுகோள் கடிதத்திற்கிணங்க பிரேத பரிசோதனை செய்தேன். எனது சான்றிதழில் மேற்படி பிரேத பரிசோதனைக்கு எவ்வளவு நேரத்திற்கு முன் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஒரு நபர் பலகைக்கல்லின் மீது விழுந்தால் மேற்கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்புகள் குறைவு. நான் வேண்டுகோள் கடிதத்துடன் வந்த வழக்கு வரலாறுக்கு ஏற்றவாறு பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.